## முன்னுள் பேரவைத் தலைவர் தமது பதவி நீக்கம் குறித்து தொடர்ந்துள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவது முறைதானு என்பது குறித்து

[1973 ஆகஸ்ட் 3

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி:** இராமன் நாயர் முதல் கக்கன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வரை யாரும் பட்டா பெற்ற நிலத்தைத் திருப்பித் தரவில்லை. புலவர் கோவிந்தன் திருப்பித் தந்து விட்டார், திருப்பித் தந்துவிட்டார் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் இருக்கிறுர். தலைவர் பேசட்டும்.

### (இ) அதிகாரிகள் உட்காரக்கூடிய இடத்தில் சட்டமேலவை உறுப்பினர் உட்காரலாமா என்பது குறித்து

**திரு. எம். சுரேந்திரன்:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கே சட்டசபையில் 'அஃபிஷியல்ஸ்' இருக்கக்கூடிய இடத்தில் ஒரு எம்.எல்.சி. இருக்கலாமா? அப்படி இருப்பது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது தயவுசெய்து கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள். அவர்கள் மேலவைத் துணைத் தலைவர். அப்படிச் சொல்வது "Not in good taste".

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தச் சபையைப் பொறுத்த வரையில் யார் எங்கே உட்கார வேண்டும் என்பதைப் பற்றி சபைத் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். சமீபத்தில் போலீஸ் அதிகாரிகள்கூட வருகிறுர்கள். அதிகாரிகள் உட்கார வேண்டிய இடத்தில் அதிகாரிகள் இல்லாதவர்கள்கூட உட்காருகிறுர்கள். எம்.எல்.சி. உட்கார வேண்டிய இடத்தில் இன்றைக்கு உட்காரவில்லை. நாளைக்கு எம்.எல்.ஏ. உட்காரவேண்டிய இடத்தில் வேறு யார் வேண்டுமானுலும் வந்து உட்காரலாம். அதற்குத்தான் யார் எங்கே உட்காருவது என்கிற பிரச்சினையே இங்கே எழுப்பப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு இட நெருக்கடியின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டது.

1973 ஆகஸ்ட் 3]

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மேலே பாக்ஸ் காலியாகத்தான் இருக்கிறது. மேலே போய் உட்காருவதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது ?

**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். மேலே காலியாக இருப்பது கவர்னர்ஸ் பாக்ஸ்.

**திரு. முனு ஆதி :** கண்ணெதிரே இடம் காலியாக இருக்கிற போது இட நெருக்கடி என்கிற சமாதானத்தை மட்டும் சொல்ல வேண்டாம்.

THIRU G. R. EDMUND : The balcony is still vacant and how is it said that there is no space?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நமக்குத் தெரிகிற அளவு எதிராளிக்கும் தெரியலாம் என்பதை மனதில் வைத்து முனு ஆதி அவர்கள் பேசவேண்டும். அது யாருக்காவது ரிசர்வ் ஆகியிருக்கலாம்.

THIRU G. R. EDMUND : For the Deputy Chairman of the Legislative Council, anybody can be evicted.

**திரு. எம். சுரேந்திரன் :** யார் யார் எங்கே உட்காரவேண்டும் என்கிற நியதி உண்டா இல்லையா? நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் கேட்கிறோம்.

(திரு. எட்மண்ட் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது பேரவைத் தலைவர் தேர்தல். வேறு எதையும் நான் இப்போது அனுமதிக்கப் போவதில்லை.

**2. (ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் தமது பதவி நீக்கம் குறித்து தொடர்ந்துள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவது முறைதானா என்பது குறித்து.**

**திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் என்ற பெயரில் இப்போது நடைபெற இருக்கிற நிகழ்ச்சியையொட்டி எங்கள் கருத்துக்களைச் சொல்ல தாங்கள் என்னை அனுமதிக்க வேண்டுகிறேன். கடந்த